3r.l September 1959] [Sri S. C. Sadayappa Mudaliar]

வளர்சசி—பாமர மக்களின் வளர்ச்சியில் இருக்கிறதே தவிர, முதலாளிகளின் ஆதரவைக் கொண்டு இந்தக் கட்சி வளர்ச்சியடையவில்லை என்று கனம் அண்ணாதுரை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன. தேர்தல் காலத்தில் அவர்களுடைய தயவு தேவையாயிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ என்னவோ தெரியாது. ஜனநாயக முறையில் தேர்தல் நடக்கிறதே தவிர, பஸ் முதலாளிகளுடைய ஆதரவைக் கொண்டு கட்சி நடக்கிறது என்று சொல்லுவது சரியல்ல.

அவர்களுடைய நோக்கமெல்லாம், மக்கள் 2½ ஆண்டுகளாக என்னென்ன திட்டங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்கும்போது கொடுப்பதற்காக வேண்டி பஸ்களை தேசீய மயமாக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு போனோம். அதை ஆளும் கட்சியாளர்கள் எதிர்த்து விட்டார்கள் என்று அப்படி எதிர்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை உண்டுபண்ணவேண்டும் என்பதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, காங்கிரஸின் லட்சியம், மக்களுக்காக வேண்டி செய்கிற திட்டங்கள் எல்லாவற்றையும் நன்கு அறிந்த மக்கள் பஸ்களை தேசீயமயமாக்கவேண்டுமென்ற தீர்மானத்தை காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள் என்று சொன்னால் நம்பமாட்டார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக பஸ்களை தேசீய மயமாக்குவதால் பல கோடி ரூபாய்கள் வருகிறது என்று சொல்லுகிறார்கள். ஒரு தொழில் நடத்தினால் லாபம் இருக்கத் தான் செய்யும். ஆனால் இந்தத் தொழிலை நாம் எடுத்து கொண்டால் லாபகரமாக இருக்குமா? அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் 12 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்குமா? என்று பார்க்கும்போது பணத்தை வீணாகச் செலவு செய்ய உதவுமே தவிர நல்ல முறையில் தொழில் நடத்த முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Mr. SPEAKER: இப்போது மணி 1-30 ஆகி விட்டது. கனம் அங்கத்தினர் அடுத்த உத்தியோகச் சார்பற்ற தினத்தில் நடக்கும் இந்தத் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் தொடர்ந்து பேசலாம். இந்தச் சபையை நான் நாளைக் காலை 8-30 மணி வரையில் ஒத்தி வைக்கிறேன்.

The House then adjourned.

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

B. Reports, Notifications and other papers.

50. *The Madras Borstal Schools (Amendment) Bill*, 1959.

51. *The Indian Partnership (Madras Amendment) Bill*, 1959.

52. *The Madras Irrigation Works (Construction of Field Bothies) Bill*, 1959.

53. *The Madras District Municipalities (Amendment) Bill*, 1959.